மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னென்ன வகையான காய்கறிகளைச் சேர்க்க முடியும் என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். கலவை சாதத்தில் அனைத்துக் காய்கறிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, முட்டை இதில் ஏன் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றால், மற்ற சிறு தானியங்களைவிட 6.1 கிராம் புரதச்சத்து முட்டையில் அதிகமாக இருக்கிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சிறுதானியங்களில் இருக்கின்ற புரதச்சத்து 2 கிராம் அல்லது 4 கிராமிற்குக் குறைவாக இருப்பதால் குழந்தைகளுடைய வளர்ச்சிக்கும், அவர்களின் தேவைக்கும் அது போதுமானதாக இல்லை. ஆகவே, முட்டை கொடுப்பதன்மூலம் ஏற்படுகின்ற புரதச்சத்தினுடைய அளவு சரி செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

***3539—திரு. உ. மதிவாணன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், வடுகச்சேரி ஊராட்சியிலுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகின்ற தெய்வம், என்னை வாழ வைக்கும் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

2017 ஜனவரி 27]

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், கீழ்வேளூர் தொகுதி, வடுகச்சேரி ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 37 சென்ட் பரப்பளவு கொண்ட நிலம் கையகப்படுத்தப்பட்டு, ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், வடுகச்சேரி ஊராட்சியின் சுற்றுப்புறத்திலுள்ள வடுகச்சேரியில் 326 ஹெக்டேர் நிலமும், ஆலங்குடி ஊராட்சியில் 203 ஹெக்டேர் நிலமும், இருக்கை ஊராட்சியில் 300 ஹெக்டேர் நிலமும், மாதானம் ஊராட்சியில் 268 ஹெக்டேர் நிலமும், செம்பியன் மகாதேவி ஊராட்சியில் 150 ஹெக்டேர் நிலமும், ஆகமொத்தம் 1,247 ஹெக்டேர் நிலங்களில் நெல் விளைவிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு மட்டும் 40 கிலோ எடையுள்ள 13,600 மூட்டைகள் அளவில் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது அந்தப் பகுதியில் உள்ள நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணி எப்பொழுது தொடங்கும் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 474 கோடி ரூபாயை விவசாயிகளுக்கு நெல்லுக்கு ஊக்கத் தொகையாகக் கொடுத்த ஒரே தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை இந்த அவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்பின்படி, கடந்த 5 ஆண்டுகளில் 31 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் 106 நெல் கொள்முதல்*

[2017 ஜனவரி 27

நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் 343 நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கிவருகின்றன. மேலும், தற்பொழுது 54 நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் 17 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கு நடவடிக்கைகள் துவங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தாலுகாவில் நிலப்பாடி, தாலயமலை மற்றும் பாலக்குறிச்சி ஆகிய இடங்களிலும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள வடுகச்சேரி கிராமத்திலும் மொத்தம் 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதற்கு 20–1–2017 அன்று வேலைக்கான உத்தரவு–work order வழங்கப்பட்டுவிட்டது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. விவசாயிகளோடு தொடர்புடைய ஒரு செய்தி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை பொய்த்துப் போன காரணத்தாலும், காவேரியில் நீர் வராத காரணத்தாலும், நாட்டில் 80 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் வேலையின்றி, வருமானமின்றி இன்றைக்கு வறுமை நிலையைத் தொட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்த அரசாங்கம் ஏதாவது நிவாரணம் வழங்குவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு 2015–2016 இல் விவசாயிகளுக்கு அளிக்கப்படவேண்டிய காப்பீட்டுத் தொகை (Insurance) இதுவரையில் வழங்கப்படாமல் இருக்கின்றது. அதுகுறித்து, விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், ஈதல்; இசைபட வாழ்தல்; அதுஅல்லது ஊதியம். . . (குறுக்கீடுகள்)

2017 ஜனவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் கேட்ட மூலக்கேள்வி நேரடி நெல் கொள்முதல் நிலையம் குறித்தது. நீங்கள், துணைக் கேள்வியில், சம்பந்தமில்லாமல் கேட்டீர்கள் என்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில், அதற்கெல்லாம் பதில் இருக்காது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லி முடியுங்கள்.*

திரு. உ. மதிவாணன்: *நான் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். ஆளுநர் உரையின்போது அந்த கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படாது என்ற காரணத்தால் விவசாயத் தொழிலாளர்களுக்கு. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் இல்லை. அவ்வளவுதான். வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

ஜவுளிப் பூங்கா

***3998—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னம் தொகுதி, வேப்பூர் ஒன்றியத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வு நான் அறியாதது; உழைப்பு என்னை நீங்காதது" என்ற என் தாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி துவங்குகின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) குன்னம் தொகுதி, வேப்பூர் ஒன்றியத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், அப்பகுதியிலுள்ள தொழில் முனைவோர் முன்வருவார்களேயானால் நடைமுறையிலுள்ள